முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் மாசி மாதம் 14 திகதி முதல்
சுபகிருது வருடம் மாசி மாதம் 21 திகதி வரை
(26.02.2023 ஞாயிறு முதல் 05.03.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. சமத்துவ சமதர்ம வடிவாய்
   சகலருக்கும் ஞானம் அருள
   சமரச சன்மார்க்கம் துவக்கி
   சடாட்சரனாய் அருளும் அரங்கனே
2. அரங்கனே உமை வாழ்த்தியே
   அகத்திய மகரிஷியானும் இனிதே
   வரங்களென இந்தியா தமிழகத்தின்
   வருங்கால பலனாக வாரஆசி
3. ஆசிதனை சுபகிருது சால்திங்கள்
   அய்யமற முன்னான்கீர்திகதிமேல் மூவேழு திகதிவரை
   தேசமதில் நடக்கும் நிகழ்வாக
   தெரிவிப்பேன் அரங்க ஞானிகேட்க
4. கேட்கவே ஞானபூமி ஆனதொரு
   குறைவிலா இந்தியா தமிழகம்
   ஆட்சியில் குறைகள் கண்டாலும்
   ஆபத்திலா மக்களை காத்திடும்
5. காத்திடும் தன்இயற்கை பலத்தால்
   காத்திடும் தன் இறைபலத்தால்
   உத்தமமில்லா சுருட்டல் பதுக்கல்
   ஊழலில் மிதப்பவர்க்கே ஆபத்து
6. ஆபத்து எந்த வகையாகவும்
   அணுகி சோடை நிகழும்
   அபயமென ஆறுமுகப்பெருமான்
   அருள் திருவடி பற்றா வாழும்
7. வாழும் மானுடப் பிறவிகள்
   வாழ்வதே சுகமென எண்ணி
   நாளும் நாளும் தயவில்லா
   நன்மை வழிவரா தொடர்ந்தால்

8. தொடர்ந்தால் அவர்கள் செயலே
தீவினையாகத் திருப்பித் தாக்கி
இடராம் பேரிடர் போல அணுகி
இன்னும் பல இழிபிறவி கண்டு
9. கண்டுமே உழல நேருமப்பா
கண்டேனும் தெளிந்து மீண்டுவர
தொண்டுமிக்க தூய ஆட்சிபுரிய
தேசமாம் இந்தியா தமிழகம் மீளும்
10. மீளும் மக்களுக்கு உரியநல்
மேலான ஞான ஆட்சியாக
வேலவனே ஆளும் வண்ணம்
விரைந்து மாற்றம் காண்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

ஜாதிமத இனமொழி பேதம் இல்லாத சமத்துவ சமதர்மமே வடிவமாய் உலகமக்கள் அனைவருக்கும் ஞானம் அருளி அறியாமை நீக்கி ஜீவதயவைப் பெருக்கி சகலரையும் வாழவைக்கும் சக்தி மிக்க சமரச சன்மார்க்கத்தினை இவ்வுலகினில் உருவாக்கி சன்மார்க்க தலைவனாம் ஞானத் தலைவன் சடாட்சரன் முருகப்பெருமானின் ஆற்றலாய் அவதாரமாய் தோன்றி உலகோர்க்கு அருள் செய்து காக்கின்ற மகாஞானி ஆறுமுக அரங்க மகா தேசிகரே உம்மை போற்றி வாழ்த்தியே அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தினிலே சுபகிருது வருடம் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

எண்ணற்ற ஞானிகள் தோன்றிய ஞான பூமியாம் இந்தியா தமிழகத்தில் ஆட்சியர்கள் குறைகள் உள்ள ஆட்சியை தந்திட்டாலும் ஆபத்துகள் இல்லாமல் ஞானிகள் ஆசியால் காப்பாற்ற படுகின்றனர். ஞானபூமியானதால் அதன் தன் இயற்கை பலத்தால் கடவுளின் சக்தியால் காக்கப்படுவதினாலே இத்தகைய ஞானபூமியில் மக்களுக்கு துன்பம் அளிக்கும் சுருட்டல், பதுக்கல், ஊழல் செய்து வாழ்பவர்க்கே ஆபத்துகள் உண்டாகும் மற்றோர் காக்கப்படுவார்கள்.

தீமையான வழியில் செல்பவர்களுக்கு எந்த வகையிலும் துன்பம் நிகழுமப்பா. முருகா உமது திருவடிகளே சரணம் என முருகப்பெருமான் திருவடிகளிலே தஞ்சம் அடைந்து முருகப்பெருமானின் அருள் திருவடியைப் பற்றி வாழாது தம் மனதிற்கு தோன்றியபடி வாழும் வாழ்வே சுகம் என எண்ணி வாழ்கின்ற மனிதர்களே நீங்கள் நன்மை செய்யாமல் நாளும்நாளும் தயவில்லாது தொடர்ந்து தீய வழியில் சென்று தீமைகள் செய்து வாழ்ந்தால் அவர்கள் செய்கின்ற தீமைகளே தீவினையாக மாறி அவர்களை திருப்பித்தாக்கி பேரிடர் போல துன்பம் உண்டாக்கும்.

இந்த பிறவியில் துன்பங்களை அனுபவிப்பதோடு இன்னும் பல பிறவிகள் கீழ்நிலையான பிறவியாய் பிறந்து துன்பத்தில் வாழ நேருமப்பா. ஆதலினாலே இனிமேலாகினும் கண்டு தெளிந்து தாம்செய்திட்ட பாவங்களை உணர்ந்து அதிலிருந்து மீண்டு வந்து தொண்டுள்ளம் மிக்க தூய நல்லாட்சி புரிந்திட இந்தியா தமிழகம் மீண்டு வருமப்பா.

அவ்விதம் பாவங்களில் இருந்து மீண்டு ஆட்சி புரிந்திட அவர்களது ஆட்சி மக்களுக்கு உண்டான நல்லாட்சியாக ஞானஆட்சியாக முருகப்பெருமான் தலைமையில் ஆட்சிபுரியும் ஞானஆட்சியாக மாற்றம் அடைந்து மக்களும் நாடும் எல்லாவிதமான நல்ல மாற்றங்களை அடைந்து வளம் பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–